## 28.33 உயர்நிலைக்குழுவின் பொது நூலகங்கள் தொடர்பான பரிந்துரைகள் மீதான அரசின் முடிவுகள்

பள்ளி கல்வி (கே2) துறை

அரசாணை (நிலை) எண்.202 நாள் : 2.7.1999

படிக்க :

செயலாளர், ஊரக வளர்ச்சித்துறை நேர்முகக் கடித எண் 14232/சி2/99 நாள் 11.5.99

**ஆணை**

கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகள் என்ற மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு பல்வேறு துறை சார்ந்த அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகளை வழங்குவது குறித்து அரசுக்கு பரிந்துரைகள் செய்ய உயர்நிலைக்குழு ஒன்று அமைக்கப்பட்டது. மேற்படி உயர்நிலைக்குழு பொது நூலகங்கள் தொடர்பாக சில அதிகாரங்கள் மற்றும் பொறுப்பினை மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு வழங்க சில பரிந்துரைகளை செய்தது.

2. மேற்படி உயர்நிலைக்குழுவின், பொது நூலகங்கள் தொடர்பாக பரிந்துரைகளை அரசு கவனமாக பரிசீலித்தது. அதனடிப்படையில், கீழ்க்கண்ட அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகள் மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு வழங்கி அரசு இதன் வழி ஆணையிடுகிறது.

**கிராம ஊராட்சிகள்**

1. கிராமப்புறங்களில் வாசக சாலைகள் (Reading Rooms) அமைப்பது கிராம ஊராட்சிகளில் பொறுப்பாக இருக்கும் அலுவலர்களின் மாறுதல், மற்ற நடவடிக்கைகளும் அரசின் பொறுப்பாக இருக்கும்

**ஊராட்சி ஒன்றியங்கள்**

2. ஊராட்சி ஒன்றியங்களை பொறுத்த வரையில் நூலகங்களின் குறைகளை சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு தெரிவித்தல், நூலகங்களுக்கு நூல்கள் சேகரித்தல் , வாசகர்கள் தொகையைப் பெருக்குதல்

**மாவட்ட ஊராட்சிகள்**

3. மக்களிடையே படிக்கும் பழக்கத்தை ஏற்படுத்துதல், பிற திட்டங்களுடன் ஊரகப் பணிகளை ஒன்றிணைத்தல், நூலகங்களுக்கு போதுமான வசதிகள் செய்து கொடுத்தல், நிதி பெற்றுத் தருதல் (to mobilize funds from public)

(ஆளுநரின் ஆணைப்படி)

**எம்.ஏ. கௌரிசங்கர்**
அரசு செயலாளர்